# இலங்கை அரசாட்சி "கெசெற்" பத்திரிகை.

அரசாட்சியாரின் அநுமதிப்படி பிரசுரிக்கப்பட்டது.

இல. 8,687 — 1940 ம் ௵ கார்த்திகைமீ 29 ந் திகதி, வெள்ளிக்கிழமை.


## Part IV.—நான்காம் பாகம்.

### அரசாட்சியாரின் விளம்பரம்.

**M. L. A.—B 1762**
**L. D.—B 197/40**

**நாய்களைப் பதிவுசெய்தற்கான சட்டம்.**

நாய்களைப் பதிவுசெய்தற்கான சட்டத்தின் (அதி : 334) 4 ம் பிரிவின்படி நிர்கொழும்பு நகரசங்கத்தின் காரியபாகம் நடத்தும் எல்லைக்குள் வழங்குவதற்காக, அதன் பொருட்டு முறைமையான அதிகாரியால் அதாவது நீர்கொழும்பு நகரசங்கத் தலைவரால் உண்டாக்கப்பட்ட உபவிதிகள்

ச. க. விஜயரெத்தினம்,
நகரசங்கத் தலைவர்.

நகரசங்கக் கந்தோர்.
நீர்கொழும்பு, 1940 ம் ௵ நவம்பர்மீ 26 ந் உ.

உபவிதிகள்.

1. இவ்வுபவிதிகளில் "தலைவர்" என்பது நகரசங்கத் தலைவர் எனப் பொருள்படும். வருடாந்தப் பதிவுவேதனம் என்பது சட்டத்தின் 4 ம் பிரிவின்படி இறுக்கப்படவேண்டிய வருடாந்தப் பதிவுவேதனம் எனப் பொருள்படும். "சொந்தக்காரன்" என்பது ஒரு நாய் சம்பந்தமாக, அந்நாயைத் தன் பாதுகாவலில் அல்லது உடமையாக வைத்திருப்பவனையும் உளப்படுத்தும்.

2. (1) 6 மாதத்திற்கு மேற்பட்ட வயதுடைய யாதேனுமொரு நாய் வைத்திருக்கப்படும் எந்த வீட்டிலேனும் அல்லது வளவிலேனும் குடியிருப்பவர் இத்துடனுள்ள அட்டவணையில் காட்டப்பட்ட மாதிரிப்பத்திரத்தில் விவரத்திரட்டொன்றினை ஒவ்வொரு வருடத்திலும் மார்ச்மீ 1 ந் திகதியன்று அல்லது அதற்கு முன்னர் தலைவருக்கு அனுப்புதல் வேண்டும்.

(2) எவ்வருடத்திலாவது பங்குனிமீ 1 ந் திகதிக்குப் பின்னர் எவராவது எந்த வீட்டிலேனும் வளவிலேனும் ஒரு நாயை வைத்திருக்க தொடங்குமிடத்து, அத்தகை வீட்டில் அல்லது வளவில் குடியிருப்பவர் இத்துடனுள்ள அட்டவணையில் காட்டப்பட்ட மாதிரிப்பத்திரத்தில் மேலதிகமான விவரத்திரட்டொன்றினை உடனே தலைவருக்கு அனுப்புதல் வேண்டும்.

3. வருடாந்தப் பதிவு வேதனம்—

(a) 2 (1) ம் உபவிதியின்படி விவரத்திரட்டு அனுப்பப்பட்டுள்ள ஒரு நாய் விஷயத்தில் எந்த வருடத்துக்கு கட்டவேண்டுமோ அவ்வருடத்தின் சித்திரைமீ 1 ந் திகதியன்று அல்லது அதற்கு முன்னர், அல்லது

(b) 2 (2) ம் உபவிதியின்படி மேலதிகமான விவரத்திரட்டொன்று அனுப்பப்பட்டுள்ள ஒரு நாய் விஷயத்தில் அத்தகைய மேலதிகமான விவரத்திரட்டு அனுப்பிய திகதியிலிருந்து, பதினைந்து நாட்களுக்குள் ஒவ்வொரு நாயின் சொந்தக்காரனால் கட்டப்படவேண்டும்.

4. வருடாந்தப் பதிவு தேவனம் கட்டியதும் தலைவர் அந்த நாயின் சொந்த்க்காரனுக்கு—

(i) பதிவுச்சான்றுரைப் பத்திரமொன்றையும் ;

(ii) பதிவுச் சான்றுரைப் பத்திரத்தின் இலக்கம் குத்தப்பெற்ற ஓர் உலோகத் தகட்டினை அல்லது கழுத்துப்பட்டியையும் கொடுப்பார்.

ஆயின் பதிவு செய்வதற்கு விண்ணப்பஞ்செய்யப்பட்டுள்ள எந்த நாயினையும், தலைவர் தமது பார்வைக்கு கொண்டுவரும்படி கேட்கலாம் மேலும்—

(a) அந்த நாயைப் பார்வைக்கு கொண்டுவரப்படாதிருப்பின் ; அல்லது

(b) அந்த நாய் தலைவருடைய கருத்தின்படி வாழ்வதற்கு தகுதியற்ற முறையில் அங்கவீனப்பட்டு அல்லது நோய்வாய்ப்பட்டு அல்லது பிற நாய்களுக்கு நோய் தொற்றும் வாயிலாக நோய்வாய்ப்ப[illegible]ருப்பின், அல்லது

(c) அந்த நாய் சொந்தக்காரனால் வழக்கமாக துன்புறுத்தப்பட்டிருப்பின், அல்லது புறக்கணிக்கப்பட்டிருப்பின், அந்த நாய்க்கு பதிவுச் சான்றுரைப்பத்திரத்தையும் உலோகத்தகட்டினை அல்லது கழுத்துப் பட்டியையும் கொடுக்க மறுக்கலாம்.

5. யாதேனு மொரு நாய்க்கு பதிவுச் சான்றுரைப்பத்திரம் கொடுபட்டபின், அந்த நாயினுடைய சொந்தக்காரனின் விலாசத்திற்கு அறிவித்தல் கொடுத்தபின்னர்—

(a) அந்த நாய் தலைவருடைய கருத்தின்படி வாழ்வதற்குத் தகுதியற்ற முறையில் அங்கவீனப்பட்டதாகி அல்லது நோய்வாய்ப்பட்டதாகிவிடின், அல்லது

(b) அந்த நாய் சொந்தக்காரனால் வழக்கமாக துன்புறுத்தப்பட்டிருப்பின், அல்லது புறக்கணிக்கப்பட்டிருப்பின், அல்லது

(c) அந்த நாய் தொற்று நோயால் அல்லது ஒட்டு நோயால் பீடிக்கப்பட்டிருக்கும்பொழுது வேறெந்த நாயுடனும் ஊடாடிதிரியச் சொந்தக்காரன் விட்டிருப்பின்,

(d) அந்த உலோகத்தகடு அல்லது கழுத்துப்பட்டியின்றி அலைந்து திரியக் காணப்படின் அத்தகைய பதிவுச் சான்றுரைப் பத்திரத்தைத் தலைவர் அழித்துவிடலாம்.

6. (1) 4 ம் உபவிதியின்படி பதிவுச் சான்றுரைப்பத்திரம் மறுக்கப்பட்ட அல்லது 5 ம் உபவிதியின்படி அழிக்கப்பட்ட யர்தேனுமொரு நாயின் சொந்தக்காரன் தலைவர் அறிவித்தற் பத்திரம், அனுப்பியதும் அவ்வறிவித்தலிற் குறிப்பிட்டிருக்கும் நேரத்திலும் இடத்திலும் அந்த நாயைக் கொண்டு சென்று காட்டவேண்டும்.

(2) அப்படிப்பட்ட ஒவ்வொரு நாயும் தலைவர் தகுதியெனக் கருதும் வகையில் அழிக்கப்படலாம் அல்லது விநியோகிக்கப்படலாம்.

7. உலோகத்தகடு அல்லது கழுத்துப்பட்டி கிடைக்கப்பெற்றுள்ள யாதேனுமொரு நாயின் சொந்தக்காரன், அந்த நாய் சம்பந்தமாகக் கொடுக்கப்பட்ட பதிவுச் சான்றுரைப்பத்திரம் பெலப்புடையதாகவிருக்கும் காலம் முழுவதும் அந்த உலோகத் தகட்டை அல்லது கழுத்துப்பட்டியை அந்த நாயின் கழுத்தில் பத்திரமாய் அணிவித்துக்கொள்வதற்கேற்ற வழிவகைகள் யாவற்றையும் கையாடவேண்டும்.

8. இந்த உபவிதிகளின்ப்டி தலைவருக்குரிய தத்துவங்கள் எல்லாவற்றையேனும் அவற்றுள் எதையேனும் செலுத்துவதற்கு அவர் எவருக்காவது எழுத்துமூலம் அதிகாரம் கொடுக்கலாம்,

9. 1915 ம் ஆண்டு பங்குனிமீ 5 ந் திகதியைக்கொண்ட 6,701 ம் இலக்கக் கெசற் பத்திரிகையில், பிரசுரஞ்செய்யப்பெற்ற நாய்களைப் பதிசெய்தலைப் பற்றிய நீர்கொழும்பு லோக்கல் போட்டாரால் உண்டாக்கப்பட்ட உபவிதிகள் இத்தால் அழிக்கப்படுகின்றன.

அட்டவணை.

மாதிரிப்பத்திரம்.

| | |
|---|---|
| இல :————. | இல :————. |
| வீட்டிலக்கம் :————. | 19—ம் ஞு பங்குனிமீ 1 ந் தேதியன்று அல்லது அதற்குமுன்னர் பூரணப்படுத்தி தலைவருக்கு அனுப்பப்பட வேண்டிய விவரணத்திரட்டு :————. |
| தெரு : ————. | வீட்டிலக்கம் :————. |
| கிராமப் பெயர் : ————. | தெரு : ————. |
| தோட்டப் பெயர் : ————. | கிராமப் பெயர் : ————. |
| குடியிருப்பவரின் பெயர் :———— | தோட்டப் பெயர் : ————. |
| | குடியிருப்பவரின் பெயர் : ————. |

| வைத்திருக்கும் நாய்களின் தொகை | விவரம் | | | | | குறிப்பு | சொந்தக்காரனின் பெயர் | அடுத்த எப்பிரல்மீ 1 ந் திகதியன்று அல்லது அதற்குமுன் கட்டவேண்டிய தேதி |
|---|---|---|---|---|---|---|---|---|
| | சாதி | ஆணோ பெண்ணோ | நிறம் | கழுத்தின் சுற்றளவு | விசேஷ அடையாளங்கள் | | | |
| | | | | | | | | |

ஒப்புவித்த தேதி :
19—ம் ஞு

குடியிருப்பவரின் கையொப்பம்.

ஒப்புவித்தவரின் கையொப்பம்.

உரிய திகதியில் அல்லது அதற்கு முன்னர் இந்த விவரணத்திரட்டினைப் பூரணப்படுத்தி யனுப்பத்தவறின் 20 ரூபாவுக்கு மேற்படாத தண்டத்துக்குப் பாத்திரராகவேண்டி வரும்.

ஒப்புவித்த தேதி :
19—ம் ஞு—

---

## இலங்கை அரசாங்க சபை தேர்தலைப்பற்றிய அறிவித்தல்.

### இலங்கை (அரசாங்க சபை தேர்தல்) விஷயமாய் இராச்சிய மந்திர ஆலோசனைச் சபையில் ஏற்பட்ட 1931 ம் ஆண்டின் சட்டம்.

இல. 1. கொழும்பு வட தேர்தற் பகுதி.

மேற்குறித்த தேர்தற் பகுதிக்குச்சேர்ந்த வர்க்காளரின் திருத்தியமைத்த பெயரிடாப்பு பூர்த்தியாக்கப்பட்டிருக்கின்றதென்றும், அவ்விடாப்பு கொழும்பு, பதிவுகாரியஸ்த தலைவர் கந்தோரில் கந்தோர் வேலை மணித்தியாலங்களில் பார்வையிடத் தக்கதாய்த் தயாரித்துவைக்கப்பட்டிருக்கிறதென்றும் இத்தால் அறிவித்தல் கொடுக்கப்படுகின்றது.

இலங்கை (அரசாங்க சபைத் தேர்தல்) விஷயமாய் இராச்சிய மந்திர ஆலோசனைச் சபையிலேற்பட்ட 1931 ம் ஆண்டின் சட்டத்துக்கிணங்க, மேற்குறித்த தேர்தற் பகுதிக்குரிய பெயரிடாப்பில் தனது பெயரைப் பதிவிப்பதற்குத் தகைமையுடையோராயிருக்கும் எவரும், அல்லது அவ்விடாப்பிலிருந்து விடப்பட்டு அல்லது நீக்கப்பட்டுள்ள பெயரையுடையவராய் அப்பெயரைப் பதிவிப்பதற்கு உடந்தையுள்ள எவரும், தனது பெயரை இடாப்பிற பதிவிக்கும் நோக்கமாய் இந்த அறிவித்தல் அரசாட்சியாரின் " கெசற் " பத்திரிகையில் வெளிவந்து இரண்டு கிழமைகளுள் கொழும்பு பதிவு காரியஸ்தர் தலைவர் கந்தோரிலுள்ள பதிவுசெய்யும் உத்தியோகஸ்த (Registering Officer) ரிடம் சேரும்படி எழுத்தில் சமர்ப்பித்த கேள்விப்பத்திரமொன்றை ஒப்புவிக்கலாம்—அக்கேள்விப்பத்திரம், இலங்கை (அரசாங்கசபைத் தேர்தல்) விஷயமாய் இராச்சிய மந்திர ஆலோசனைச் சபையிலேற்பட்ட 1935 ம் ஆண்டின் திருத்தச் சட்டத்தால் திருத்தப்பட்ட இலங்கை (அரசாங்க சபைத் தேர்தல்) விஷயமாய் இராச்சிய மந்திர ஆலோசனைச் சபையிலேற்பட்ட சட்டத்தின் இரண்டாம் அட்டவணையில் காண்கிற " A " என்ற மாதிரிப்பத்திரப்படியிருப்பதோடு (மாதிரிப்பத்திரப் பிரதிகள் குறித்த பதிவுசெய்யும் உத்தியோகஸ்தரிடம் பெற்றுக்கொள்ளலாம்) கேள்விக்கு ஆதாரமாயிருக்கும் நியாயங்கள் காட்டப்பட்டும், அறிவித்தல்கள் கிடைப்பதற்காக விலாசமொன்று கொடுக்கப்பட்டுமிருத்தல் வேண்டும். ஆனால் 1940 ம் ஆண்டு புரட்டாதிமீ 15 ந் திகதி, அல்லது அதற்குமுன் மேற்குறித்த சட்டத்தின் 14 ம் அம்சத்துக்கிணங்க தானனுப்பிய கேள்விப்பத்திரமொன்று குறித்த பதிவுசெய்யும் உத்தியோகஸ்தரிடம் கிடைத்திருந்தாலன்றி, 8 ம் அல்லது 9 ம் அம்சத்தின்படி தகைமையுடையவர் என்ற நியாயங்கொண்டு தனது பெயரை இடாப்பில் எழுதுவித்துக்கொள்ளும்படி கேட்க எவரும் உரிமையுள்ளவராகார்.

மேற்குறித்த தேர்தற் பகுதிக்குரிய இடாப்பில் தனது பெயர் காணப்பெறுபவராய், இன்னொருவரின் பெயர் அல்லது தனது சொந்தப் பெயர் அந்த இடாப்பில் காணப்படுவதையிட்டு ஆக்ஷேபிப்பவரெவரும் அப்பெயரை இடாப்பிலிருந்து நீக்குவிக்கும் நோக்கமாய், இந்த அறிவித்தல் அரசாட்சியாரின் " கெசற் " பத்திரிகையில் வெளிவந்து இரண்டு கிழமைகளுள் கொழும்பு பதிவுகாரியஸ்த தலைவர் கந்தோரிலுள்ள பதிவுசெய்யும் உத்தியோகஸ்தரிடம் சேரும்படி எழுத்தாலாய விண்ணப்பப்பத்திரமொன்றை ஒப்புவிக்கலாம். அவ்விண்ணப்பப்பத்திரம் இலங்கை (அரசாங்க சபைத் தேர்தல்) விஷயமாய் இராச்சிய மந்திர ஆலோசனைச் சபையிலேற்பட்ட 1931 ம் ஆண்டின் சட்டத்தின் இரண்டாம் அட்டவணையில் காண்கிற " B " என்ற மாதிரிப்பத்திரப்படி யிருப்பதோடு (மாதிரிப் பிரதிகள் குறித்த பதிவுசெய்யும் உத்தியோகஸ்தரிடம் பெற்றுக்கொள்ளலாம்) ஆக்ஷேபனைக்காதாரமான நியாயங்கள் காட்டப்பட்டும், அறிவித்தல்கள் கிடைப்பதற்காக விலாசமொன்று கொடுக்கப்பட்டுமிருத்தல் வேண்டும்.

ஆர். எஸ். வீ. பொலியர்,
கொழும்பு வட, கொழும்பு மத்திய,
கொழும்பு தென் தேர்தற் பகுதிகளின்
பதிவுசெய்யும் உத்தியோகஸ்தர்.

பதிவுகாரியஸ்தர் தலைவர் கந்தோர்,
கொழும்பு, 1940 ம் ஞு கார்த்திகைமீ 27 ந் உ.

---

## உத்தியோக சம்பந்தமில்லாதவரின் அறிவித்தல்.

இத்தால் சகலரும் அறியவேண்டியது, களுத்துறையைச்சேர்ந்த றைகம் கோறளை கும்புக்கவில் வசிக்கும் பெத்தகே கபோசிங்ஹ, ஆகிய நான் 1907 ம் ஆண்டு 1ம் கட்டளைச் சட்டத்தின் 1 B செடூலில் 2 ம் பிரமாணத்தின்படி மூன்று மாசத்திற்குப்பின் புதுளைப் பகுதியில் சிங்களப் பாஷையில் பிரசித்த நொத்தாரிஸ் கடமை பார்க்கும் ஒருவராக என்னை நியமிக்கும்படி அரசினர் பதிவுக் கந்தோர் தலைவரிடங் கேட்டுக்கொள்ளுவேன்.

பி. கபோசிங்ஹ,

25, மெயின் ஸ்றீற்,
இரத்தினபுரி, 1940 ம் ஆண்டு செப்ரெம்பர்மீ 29 ந் உ.